Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

((Chapter XXIII, Cr.P.C)

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**

**திருவள்ளூர் (இ) பூந்தமல்லி**

**அமர்வு வழக்கு எண்.124/2020**

Depositions of : PW10 (LW12)
solemnly by Thiru.T.Ihoatraja, Junior Assistant,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அங்குசாமி | தொழில் | : | ஆட்டோ ஓட்டுனர். |
| தந்தை பெயர் | : | மணி | முகவரி | : | எண்.4, பஜனை கோவில் தெரு, கல்யாணபுரம், அம்பத்தூர். |
| வயது | : | 50 | மாவட்டம் | : | சென்னை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 3rd day of August - 2026.

(எதிரிகள் 1 முதல் 8 ஆஜர்)

முதல் விசாரணை=

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆட்டோ ஓட்டி தொழில் செய்து வருகிறேன். இன்றிலிருந்து சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் வீட்டில் இருந்த போது முந்தைய நாள் ஒரு பிரச்சனையாகி அரிதாசை வெட்டிவிட்டதாக கேள்விப்பட்டேன். சம்பவம் பற்றி வேறு ஒன்றும் தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. அவர்களை பார்த்திருக்கிறேன். எதிரிகள் எங்கள் ஏரியாவிற்கு பக்கத்து ஏரியாவை சேர்ந்தவர்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத வேண்டி அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்).

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை=

போலிசார் என்னை விசாரித்தனர் என்றும் அப்போது ஏற்கனவே எங்கள் ஊரை சேர்ந்த மகிமைதாஸ், மணிவண்ணன், அசோக், நெப்போலியன், செந்தில், விஜி ஆகியோருக்கும் ஹரிக்கும் தகராறு இருந்து வந்தது என்றும், கடந்த 06.07.2019 அன்று இரவு அம்பத்தூர் மார்கெட்டில் உள்ள ஒயின் சாப்பில் ஹரியை வெட்டி கொலை செய்துவிட்டதாக கேள்விபட்டேன் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக அவர்களை காப்பாற்ற வேண்டி மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

((Chapter XXIII, Cr.P.C)

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**

**திருவள்ளூர் (இ) பூந்தமல்லி**

**அமர்வு வழக்கு எண்.124/2020**

Depositions of : PW11 (LW13)
solemnly by Thiru.T.Ihoatraja, Junior Assistant,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ேஹமாவதி | தொழில் | : | காய்கறி வியாபாரம் |
| கணவர் பெயர் | : | புருசோத்தமன் | முகவரி | : | எண்.17/37, ஐஸ்கூல் ரோடு , அம்பத்தூர். |
| வயது | : | 55 | மாவட்டம் | : | சென்னை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 3rd day of August - 2026.

**(எதிரிகள் 1 முதல் 8 ஆஜர்)**

**முதல் விசாரணை=**

**நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் ஏரியாகாரர்கள். இன்றிலிருந்து சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் வீட்டில் இருந்த போது தெருவில் நிறைபேர் கூட்டமாக போனார்கள். என்னவென்று கேட்டபோது அரி என்பவரை கொலை செய்துவிட்டதாக சொன்னார்கள். சம்பவம் பற்றி வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தனர். அப்போதும் மேற்கண்டவாறு தான் சொன்னேன்.**

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத வேண்டி அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்).**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை=**

போலிசார் என்னை விசாரித்த போது ஏற்கனவே எங்கள் ஊரை சேர்ந்த மகிமைதாஸ், மணிவண்ணன், அசோக், நெப்போலியன், செந்தில், விஜி ஆகியோருக்கும் ஹரிக்கும் தகராறு இருந்து வந்தது என்றும், கடந்த 06.07.2019 அன்று இரவு அம்பத்தூர் மார்கெட்டில் உள்ள ஒயின் சாப்பில் ஹரியை வெட்டி கொலை செய்துவிட்டதாக கேள்விபட்டேன் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக அவர்களை காப்பாற்ற வேண்டி மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.